**DIRECTORATE OF LEGAL STUDIES, CHENNAI-10.**

**NOTIFICATION**

**ADMISSION TO LL.M. DEGREE COURSE – 2018-2019**

Applications are invited from eligible candidates for admission to LL.M., Degree Course in Chennai Dr. Ambedkar Government Law College, Pattaraiperumpudur, Government Law College, Madurai, Government Law College, Tiruchirappalli, Government Law College, Coimbatore, Government Law College, Tirunelveli and Government Law College, Chengalpattu for the academic year 2018 - 2019. Applications will be issued from **13-08-2018** and the last date for issue and receipt of duly filled applications is **29-08-2018.** Applications will be issued in all the respective Government Law Colleges. Candidates can obtain the application forms for admission either in person or by post from the Principals of the concerned college by submitting a requisition letter along with a demand draft drawn on or after **13-08-2018** in favour of **"The Director, Directorate of Legal Studies, Chennai-10 payable at Chennai",** from any of the Nationalised Banks for **Rs.500/-** ( Rupees Five hundred only ) and for Rs.**250/-** ( Rupees Two hundred and fifty only ) in respect of **SC / ST candidates** on production of attested copy of Community Certificate. Candidates who intend to receive the application through **POST** should send a requisition letter along with the appropriate demand draft and a self addressed stamped envelope for Rs.80/- to the Principal of the respective Government Law College. For further details, refer to "Instructions to candidates" in application form.

**Note:** *No LL.M., Degree Course is being offered in the Government Law College at Pudupakkam, Vellore, Viluppuram, Dharmapuri and Ramanathapuram. However, applications will be issued and the duly filled application can be submitted in the said Government Law College for the convenience of the candidates.*

**(Time of issuing applications : From 11.00 A.M to 4.00 P.M. on all working days till 29-08-2018).**

Director of Legal Studies.
Chennai-10.

# சட்டக் கல்வி இயக்ககம், சென்னை–10
# அறிவிக்கை

## எல்.எல்.எம். மாணவர் சேர்க்கை – 2018 – 2019

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பட்டறைப்பெரும்புதூர், அரசு சட்டக் கல்லூரி, மதுரை, அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி, அரசு சட்டக் கல்லூரி, கோயமுத்தூர், அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி மற்றும் அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளில் 2018–2019–ஆம் கல்வியாண்டிற்கான எல்.எல்.எம். மாணவர் சேர்க்கைக்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் **13–08–2018** முதல் வழங்கப்படும். விண்ணப்பங்களைப் பெறவும், பூர்த்தி செய்த விண்ணப்பங்களை சமர்ப்பித்திடவும் கடைசி நாள்: **29–08–2018.** விண்ணப்பங்களை அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பதாரர்கள் மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவத்தை நேரிலோ அல்லது அஞ்சல் வாயிலாகவோ, உரிய அரசு சட்டக் கல்லூரி முதல்வர்களிடம் வேண்டுதல் கடிதம் மற்றும் கேட்புவரைவோலையை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பக் கட்டணம். **ரூ. 500/–** (ரூபாய் ஐநூறு மட்டும்) ஆகும். பட்டியலின / பழங்குடியின விண்ணப்பதாரர்கள் **(SC/ST candidates)** சாதிச் சான்றிதழின் சான்றிடப்பட்ட நகலுடன், வேண்டுதல் கடிதம் மற்றும் **ரூ.250/–**க்கான (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) கேட்புவரைவோலையினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம். கேட்புவரைவோலையினை **"The Director, Directorate of Legal Studies, Chennai-10"** என்ற பெயருக்கு **13–08–2018** அன்றோ அல்லது அதற்கு பிறகு பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும். வரைவோலைகள் சென்னையில் மாற்றத் தக்கதாக இருத்தல் வேண்டும். **அஞ்சல் வாயிலாக** விண்ணப்பம் பெற விரும்புவோர் வேண்டுதல் கடிதத்துடன், உரிய கேட்புவரைவோலை மற்றும் **ரூ.80/–**க்கான அஞ்சல் வில்லை ஒட்டிய சுய விலாசமிட்ட உறை ஆகியவற்றை உரிய அரசு சட்டக் கல்லூரி முதல்வருக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு விண்ணப்பத்தில் உள்ள "Instructions to candidates" பகுதியைக் காணவும்.

**குறிப்பு :** புதுப்பாக்கம், வேலூர், விழுப்புரம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளில் எல்.எல்.எம். பட்டப் படிப்பு இல்லை. எனினும், விண்ணப்பதாரர்களின் வசதிக்காக மேற்படி அரசு சட்டக் கல்லூரிகளில் விண்ணப்பங்களை பெற்று, பூர்த்தி செய்து சமர்ப்பிக்கலாம்.

**( விண்ணப்பங்கள் வழங்கும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை )**

சட்டக் கல்வி இயக்குநர்.
சென்னை–10